# மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

## நிலையறி பரீட்சை – 2021

**தரம் 06 விஞ்ஞானம் 1½ மணித்தியாலம்**

## பகுதி – I

**தரப்பட்டவற்றுள் மிப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. மரத்தூள் அடுப்பு ஒன்றில் பயன்படுத்தப்படும் சக்தி முதல் எது?

   1.உயிர்ச்சுவட்டு எரிபொருள் 2. சூரியன்

   3.உயிர்த்திணிவு 4. காற்று

2. எல்லா உயிரங்கிகளுக்கும் பொதுவான இயல்பாக அமையாதது

   1.வளர்ச்சி, போசணை 2.சுவாசம், இனப்பெருக்கம்

   3.உறுத்துணர்ச்சி, அசைவு 4.ஒளித்தொகுப்பு, இடப்பெயர்வு

3. தரப்பட்டவற்றுள் கொள்ளும் பாத்திரத்தின் வடிவத்தைப் பெறும் சடப்பொருள் அல்லாது எது ?

   1.காபனீரொட்சைட்டு 2.நீர்

   3.செங்கல் 4.நீராவி

4.பின்வருவனவற்றுள் சடப்பொருள் அல்லாதது

   1.ஒளி 2.கல் 3.ஒட்சிசன் 4.நீர்


5.படத்தில் காட்டப்பட்டுள்ள அங்கியை இனங்காண்க

   1.அமீபா

   2.பற்றீரியா

   3.பரமேசியம்

   4.கிளமிடோமொனசு



6.பின்வருவனவற்றுள் ஒளித்தொகுப்பிற்கு அவசியமான காரணி எது ?


   1.ஒட்சிசன் 2.காபனீரொட்சைட்டு 3.குளுக்கோசு 4.ஐதரசன்

07.தெளிந்த சுண்ணாம்பு நீரின் நிறம் யாது ?

   1.வெள்ளை 2.நீலம் 3.இளஞ்சிவப்பு 4.நிறமற்றது

kalvi.lk

08. சமநிலையில் உள்ள கோல் ஒன்றின் A ன் பக்கமுள்ள பலூனில் துளையிடும் போது கோலின் சமநிலையில் ஏற்படும் மாற்றம் யாது ?




1.கோல் B பக்கமாக கீழ் நோக்கி அசையும்

2.கோல் A பக்கமாக கீழ் நோக்கி அசையும்

3.கோல் B மேல் நோக்கி அசையும்

4.கோலின் சமநிலையில் மாற்றமில்லை


09. வாட்டற்றகவு, நீட்டற்றகவு ஆகிய பௌதிக இயல்புகளைக் கொண்ட திரவியமாக அமைவது எது ?

1.கண்ணாடி  2.செம்பு  3.வைரம்  4.இறப்பர்

10. படத்தில் காட்டப்பட்டுள்ள அங்கியின் வளர்ச்சி காலத்துடன் மாறுவதைச் சரியாகக் காட்டும் வரைபு



1.  2.  3.  4.




11 .புவி மேற்பரப்பில் காணப்படும் பயன்படுத்தக்கூடிய நீரின் சதவீதம் யாது ?


1) 97.41%  2) 2.58%  3) 70%  4) 0.01%

Education கல்வி අධ්‍යාපන

12. நீர் பெறப்படும் மூலங்களில் படிவு வீழ்ச்சியில் உள்ளடங்குவது எது ?

1)கிணறு  2)பனிமழை  3)ஓடைகள்  4)ஏரிகள்

13.A. B ஆகியன பற்றிய கூற்றுக்களில் சரியானது




சூரியன்  சந்திரன்


1.A, B இரண்டும் ஒளிரும் பொருள்

2.A, B இரண்டும் ஒளிராப் பொருள்

3.A ஒளிரும் பொருள், B ஒளிராப்பொருள்

4.A ஒளிராப்பொருள், B ஒளிரும் பொருள்

14. திரவக் கனவளவைத் திருத்தமாகத் துணிவதற்கு படத்தில் காட்டப்பட்ட எம்மட்டத்தில் கண்ணை வைத்து அவதானிப்பது பொருத்தமானதாகும்?




1.A  2.B  3.C  4.D

15. A-உயிருள்ளது, ஒளியை வெளிவிடும்

B-உயிரற்றது, ஒளியை வெளிவிடும்

A, B ற்குப் பொருத்தமான விடையாக முறையே அமைவது எது ?

1.சூரியன், மின்மினிப்பூச்சி  2.மின்மினிப்பூச்சி, சூரியன்

3.சூரியன், சந்திரன்  4.சந்திரன், மின்மினிப்பூச்சி

16. ரபான் இசைக்கருவியை ஒத்த முறையில் ஒலியைப் பிறப்பிக்கும் இசைக் கருவி பின்வருவனவற்றுள் எது ?

1.மிருதங்கம்  2.புல்லாங்குழல்  3.வீணை  4.வயலின்

17. மிதக்கும் மின் உற்பத்தி நிலையங்களில் பயன்படுத்தப்படும் சக்தி முதல் எது ?

1.புவி வெப்பம்  2.கருச்சக்தி  3.வற்றுப்பெருக்கு  4.கடலலை

18. கறியுப்பின் இரசாயனப் பெயராக அமைவது

1.மக்னீசியம் குளோரைட்டு  2.சோடியம் குளோரைட்டு

3.சோடியம் காபனேற்று  4.கல்சியம் குளோரைட்டு

19. A- திட்டமான வடிவம், திட்டமான கனவளவு

B- திட்டமற்ற வடிவம், திட்டமற்ற கனவளவு

C- திட்டமற்ற வடிவம், திட்டமான கனவளவு

A, B, C ஆகிய சடப்பொருட்களாக உதாரணமாக அமைவன முறையே

1.நீர், செங்கல், ஒட்சிசன்  2.செங்கல், நீர், ஒட்சிசன்

3.செங்கல், ஒட்சிசன், நீர்  4.மரக்குற்றி, நீர், பால்

20.'' சக்தி நெருக்கடி'' என்பதன் மூலம் நீங்கள் விளங்கிக் கொள்வது,

1.சக்தி பற்றாக்குறையாக அமைதல்

2.சக்தியை திட்டமிட்டுப் பயன்படுத்தல்

3.சக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்தல்

4.சக்தி தேவைக்கு மேலதிகமாகக் கிடைத்தல்

**(2 x 20 = 40 புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන

## பகுதி 02

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக

**01. A**

**1.**பச்சைத் தாவரங்கள் ஒளித்தொகுப்புச் செயன்முறைக்காக மண்ணிலிருந்துப் பெற்றுக் கொள்ளும் மூலப்பொருள் எது ?............................................................................................................................

2.சுண்ணாம்பு நீரைப் பால் நிறமாக்கும் வெளிச்சுவாச வளியிலுள்ள கூறு எது ?...............................

3.போசணையின் அடிப்படையில் விலங்குகள் யாவும் எவ்வாறு அழைக்கப்படும்?…………………..

4.மாலை நேரத்தில் வாகை மரத்தின் இலைகள் கூம்புகின்றன. இது அங்கிகளின் எச்சிறப்பியல்பு ஆகும்?...............................................................................

5.அங்கிகளின் சுவாசத்தின் போது உள்ளெடுக்கப்படும் வாயு எது ?...........................................

**B**.பின்வரும் செயன்முறைகளுக்குப் பொருத்தமான சொற்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களைத் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து எழுதுக.

| இனப்பெருக்கம் | சுவாசம் | வளர்ச்சி | இணைக்கவர் சுட்டி | நுண்ணங்கி |
|---|---|---|---|---|
| P | Q | R | S | T |

1.அங்கிகளின் உடலினுள் சக்தி உற்பத்தி செய்யப்படும் செயன்முறை…………………..

2.தனி அங்கியாக உள்ளபோது வெறுங்கண்ணால் அவதானிக்க முடியாதவை……………

3.அங்கிகளின் உயரம், கனவளவு, திணிவு என்பவற்றில் ஏற்படும் மீளா அதிகரிப்பு………

4.அங்கி ஒன்று புதிய அங்கியை உருவாக்கும் செயன்முறை……………………………..

5.ஓர் இயல்பை அடிப்படையாகக் கொண்டு அவ்வியல்பு உண்டா அல்லது இல்லையா என்பதன் அடிப்படையில் அங்கிகளை வகைப்படுத்தும் முறை ……………………………….................

(

**02. A**

1.திணிவைக் கொண்டதும், வெளியில் இடத்தைக் கொள்வதுமான பொருட்கள் எவ்வாறு அழைக்கப்படும் ?.................................

2.ஒளி, ஒலி போன்றவை சூழலிலுள்ள எவ்வகைப் பிரிவினுள் அடங்கும் ?.......................................

3.ஒரு பாத்திரத்தின் முழுக் கனவளவையும் அடைக்கக்கூடிய சடப்பொருளின் நிலை எது ?.................

4.புவியின் துருவப் பகுதிகளில் காணப்படும் பனியாறு நீரின் எப்பௌதிக நிலைக்கு உதாரணம் ஆகும் ?..................................................

5.கையுறை, பலூன் என்பவை இறப்பரினால் ஆக்கப்படுகின்றன. இதற்குக் காரணமான இறப்பரிலுள்ள பௌதிக இயல்பு யாது ?.................................................

**B.**

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் குறிப்பிடுக.

1.ஊற்றுக்களில் இருந்து பெறப்படும் நீர் நிலக்கீழ் நீராகும் (  )

2.கழிமுகங்களில் காணப்படும் நீரானது உவர் திறனின் அடிப்படையில் சவர் நீர் வகையாகும் (  )

3.விலங்குகளில் கழிவகற்றும் ஊடகமாக நீர் பயன்படுகிறது (  )

4.வளி மண்டலத்தில் நீரானது திரவ நிலையில் காணப்படுகின்றது. (  )

5.கலங்கல் நீர் ஒளியை ஊடுகாட்டாத பொருளுக்கு உதாரணம் ஆகும் (  )

**(10 x 2 = 20 புள்ளிகள்)**

**03.**

**A**

கீழே தரப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.

( சந்திரன், உயிர்த்திணிவு, மின், சூரியன், சுவட்டு எரிபொருள் )

1.புவியின் பிரதான சக்திமுதல்…………………………….. ஆகும்.

2.சிரட்டை, உமி, விறகு, போன்றவை …………………… க்கு உதாரணம் ஆகும்.

3.கடல் அலை, பாயும் நீர் போன்ற சக்தி முதல்களைப் பயன்படுத்தி …………………. சக்தியை உற்பத்தி செய்யலாம்

4…………………… கள் மிக வேகமாக முடிவடையக் கூடிய சக்தி முதல் ஆகும்.

5…………………………… ஓர் ஒளிராப் பொருள் ஆகும்.

**B. X இலுள்ளவற்றிற்கு பொருத்தமான இலக்கங்களை Y இலிருந்து தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.**

| X | | Y |
|---|---|---|
| a.ஒளியியல் நார் | ......... | 1. சிவப்பு ஒளி |
| b.இதய சத்திர சிகிச்சை | ........... | 2.வற்றுப்பெருக்கு |
| c.மெல்லிய கண்ணாடி | ........... | 3.அகங்காட்டி |
| d.தீயணைப்பு வண்டி | ............ | 4.லேசர் கதிர் |
| e.சூரிய, சந்திர ஈர்ப்பு | | 5.ஒளி ஊடுகாட்டும் பொருள் |

**(10 x 2 = 20 புள்ளிகள்)**

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page